[1972 மார்ச் 10

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

புன்னக்காயலைச் சார்ந்த மீனவர்கள்

*** 411 வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புன்னக்காயலைச் சேர்ந்த மீனவர்கள் தங்கள் குறைகளைக் கூறி கோரிக்கைகள் அரசுக்கு விடுத்துள்ளார்களா?

(இ) 5—10—1971 முதல் 7—10—1971 வரை அடையாள உண்ணாவிரதம் இருப்பதாக அரசுக்குத் தெரிவித்தார்களா?

(உ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஆம்.

(உ) புன்னக்காயலிலுள்ள தாம்பிரபரணியாற்றின் முகத் துவாரத்தை அடைத்துக் கொள்ளும் மணல்மேட்டை உடலுழைப் பால் அகற்றுவதற்காக ஆண்டுதோறும் ரூ. 3,500 இவ்வரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ் வாண்டு மணல்மேடு மிகப் பெரிய அளவில் தோன்றி விட்டதாலும், அதனை உடலுழைப்பால் நீக்க முடியாததாலும், இந்திய-நார்வே திட்டத்தின் மணல் உறுஞ்சியைக் கொண்டு வேலை தொடங்க இருக்கும் போது ஆற்றில் புதிய வெள்ளம் வந்து மணல் மேடு தானாகவே கரைந்துவிட்டது. இவ்வரசு புதிதாக வாங்கவிருக்கும் தூர்வாரி வந்த பின்னர், எங்கெங்கு எவ்வெப்பொழுது முகத்து வாரங்களில் மணல் மேடு கள் தோன்றுகின்றனவோ அவற்றை நீக்க மேற்படி தூர்வாரி யினால் இயலும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, இந்தப் புன்னக்காயல் என்கிற கடற்கரை கிராமம் திருச்செந்தூர் தொகுதியில் உள்ளது. தாம்பிரபரணி முகத்துவாரத்தில் இது இருப்பதால் ஆண்டுதோறும் மணல் மேடிட்டு மீனவர்களின் படகுகள் போவதற்குக் கூட கஷ்டமாக இருக்கிறது. நமது மாநில அரசும் இந்த மணலை அகற்ற ஆண்டுதோறும் ரூ. 3,500

1972 மார்ச் 10]

செலவிட்டு வருகிறது. இருந்தாலும் அந்தத் தொகை போதாது. ஆகவே நிரந்தரமாக அங்கே உள்ள மீனவர்களுக்கு வசதி ஏற்படுகிற வகையில் இந்தப் புன்னக்காயலை ஒரு மீன்பிடித் துறைமுகமாக ஆக்கித் தருவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேட்கும்போதே ஆண்டுதோறும் மணல் மேடிட்டு இரண்டு படகுகள் போவதற்குக் கூட சங்கடங்கள் ஏற்படுவதைச் சொன்னார்கள். அந்த இடத்தை மீன்பிடித் துறைமுகமாக அமைப்பது என்பது கடினமாகும்.

அரிசனக் குடியிருப்புகள்

*** 412 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டத்தகா நிலையை ஒழிக்க இனியேனும் அரிசன மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனை வழங்கும்போது ஒதுக்குப்புறமாக இல்லாமல், ஊர் மக்களுடன் இணைத்துக் கொடுக்கிற திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1968-ம் ஆண்டு மே திங்களிலேயே தமிழக அரசு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வீட்டுமனையில்லா அரிசனங்களுக்கு மனைகள் வழங்கும் போது இயன்றவரையில் மற்ற இந்துக்களின் குடியிருப்புக்கருகில் வீட்டு மனை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விளக்கமாக அறிவுரை கூறியுள்ளது. உறுப்பினர் விழையும் செயல் நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன்: இந்தக் கொள்கையை இந்த ஆட்சிதான் நிறைவேற்றுகிறது என்ற வகையில் இனிமேலாவது கிராமங்களில் சேரி என்பது தனியே இல்லாதவாறு அரிசன மக்களுக்குக் காலனிகளை அமைக்கும்போது கிராமங்களை ஒட்டியே நில ஆர்ஜிதம் செய்து ஏற்படுத்த அரசு முன்வருமா ? அப்படி ஏற்படுத்தினால், குடிதண்ணீர் வசதி ஆகியவற்றை பொதுவில் செய்து தருவதற்கு வசதியாக இருக்காதா ? 1968-லே நாம் தந்திருக்கிற விதிமுறைகள்படி முறையாகக் காரியங்கள்